உ

ஓம் குஹாய நம:

திருப்புகழமிர்தம்.

(All Rights Reserved)

“ குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் றன்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம் ”

மலர். 2 | ஈஸ்வர வருஷ ஆவணிமீ 1உ | இதழ் 5
Vol. 2 | ஆகஸ்டு—1937 | No. 5

திருப்புகழ்.

திருச்செந்தூர்.

தோலொடு மூடிய கூரையை நம்பிப்
பாவையர் தோதக லீலைநி ரம்பிச்
சூழ்பொருள் தேடிட வோடி வருந்தி புதிதான
தூதொடு நான்மணி மாலைபர பந்த
கோவை யுலாமடல் கூறிய முந்தித்
தோமுறு காளையா வாசல்தொ றும்புக் கலமாருங்
காலனை வீணனை நீதிகெ டும்பொய்க
கோளனை மானமி லாவழி நெஞ்சக
காதக லோபவரு தாவனை நிந்தைப் புலையேனைக்
காரண காரிய லோகப்ர பஞ்சச்
சோகமெ லாமற வாழ்வற நம்பிற்
காசறு வாரிமெய்ஞ் ஞானத வஞ்சற் றருளாதோ

பாலன மீதும னான்முக செம்போற்
பாலனை மோதப ராதன பண்டப்
பாரிய மாருதி தோளமிசை கொண்டுற் றமராடிப்
பாவியி ராவண னார்தலை சிந்திச்
சீரிய வீடணர் வாழ்வுற மன்றற்
பாவையர் தோள்புணர் மாதுலர் சிந்தைக் கினியோனே
சீலமு லாவிய நாரதா வந்துற்
றீதவள் வாழ்புன மாமென முந்தித்
தேமொழி பாளித கோமள இன்பக் கிரிதோயவாய்
சேலொடு வாளைவ ரால்கள்கி ளம்பித
தாறுகள் பூகம ளாவிய இன்பச்
சீரலை வாயநகர் மேவிய கந்தப் பெருமாளே.

பதவுரை.

பால் அன மீதுமன் - பால்போன்ற வெண்ணிறமுடைய அன்ன வாகனத்தின் மீது நிலைபெற்றவனும், நான்முக - நான்கு முகங்களை யுடையவனும், செம்பொன் பாலனை - சிவந்த இலக்குமிதேவியின குமாரனுமாகிய பிரமதேவனை. மோது அபராதன - (பிரணவப் பொருள வினவி அது கூறாது விழித்தமையின்) கரங்களால் மோதி தண்டனையைப புரிந்தவரே!, பண்டு - முன்னாளில், அ பாரிய மாருதி தோள மிசை கொண்டு உற்று - பருத்த வடிவுடைய அந்த அநுமனது தோள்மிசை யூர்ந்து (இலஙகையை) அடைந்து, அமர் ஆடி - போர் புரிந்து, பாவி இராவணனார் தலை சிந்தி - கொடும் பாவியாகிய இராவணனது தலைகள் பத்தும கீழே யறுத்து வீழ்த்தி, சீரிய வீடணா வாழ்வுற - சிறப்புடைய விபீஷணர் இலங்கைக்கு அரசனாகி இன்புற்று வாழவுறச்செய்து, மன்றல் பாவையர் தோள் புணர் - வாசனை தஙகிய சீதை யெனும் திருமகள ஜெயத்தால் வந்த ஜெய மகளென்னும் இருமகளிரது புயத்திற் சேர்ந்த, மாதுலர் சிந்தைக்கு இனியோனே - திருமாமனாகிய நாராயணமூர்த்தியினது உள்ளத்திற்கு இனிமையான மருகோனே!, சீலம் உலாவிய நாரதர் - நல்லொழுக்கத்திற் சிறந்த நாரதமுனிவர், வந்து உற்று - தணிகைமாமலையில் வந்தடைந்து (முருகவேளை அழைத்தேகி), ஈது அவள வாழ்புன மாம் என - வள்ளியமமையார் வாழ்கின்ற தினைப்புனம இதுதான் என்று காட்ட, முந்தி - முன்னாளில், தே மொழி - தேன்போன்ற

இனிய மொழியை யுடையவரும், பாளித - சந்தனக்குழம்பு களை யணிந்தவரும், கோமள - இளமை யுடையவரும், இன்பகிரி தோய்வாய் - இன்பமலை போன்றவருமாகிய வள்ளிநாயகியைப் பொருந்தியவரே! சேலொடு வாளை வரால்கள் கிளம்பி - சேற்கெண் டைகளும வாளைமீன்களும் வராலமீன்களுந் துள்ளியெழுந்து, தாறு கொள் பூகம் அளாவிய - குலைகளையுடைய கமுகுமரங்களில் விளை யாடும, இன்ப - இன்பத்தையுடைய, சீரலைவாய நகர் - திருச்சீரலை வாய் என்னும செந்திலம்பதியில, மேவிய - விரும்பியுறைகின்ற கந்த - கந்தமூர்த்தியே!, பெருமாளே - பெருமையிற சிறந்தவரே!, தோலொடு மூடிய கூறையை - தோலாலே மூடிவைத்துள்ள சிறு குடிலை (உடம்பை), நம்பி - நிலைத்திருக்குமென நம்பி, பாவையர் - பெண்களது, தோதக லீலை நிரம்பி - வஞ்சகத்தையுடைய காமலீலை மிகுந்து, சூழ்பொருள் தேடிட - நிலையின்றி சுற்றுகின்ற செல்வத்தை ஈட்டுதற்பொருட்டு, ஓடி வருந்தி - பல திசைகளிலும் ஓடி மிகவும் வருத்தமுற்று, புதிதான - நூதனமான. தூது ஒடு நானமணிமாலை ப்ரபந்த கோவை உலா மடல் கூறி - தூது நானமணிமாலை கோவை உலா மடல் முதலிய பிரபந்தங்களை அந்நரர்கள்மீது பாடி, அழுந்தி - அந்நர துதியிலேயே அழுந்திய மனத்தையுடையவனாகி, தோமுறு காளையர் - குற்றம் நிறைந்த ஆடவருடைய, வாசல் தொறும் புக்கு - வீடுகள்தோறும புகுந்து, அலமாரும் - அலைந்து திரியும், காலனை - இயமதூதுவனுக்கு நிகரானவனை, வீணனை - வீணே நாள்போக்குப வனை, நீதி கெடும பொய கோளனை - நீதிநெறிகெட்ட பொய்யே பேசும் தன்மையுடைய கோள் சொல்லுபவனை, மானம் இலாவழி - பெருமையில்லாத தீயவழியிற் செல்லும், நெஞ்ச - உள்ளத்தை யுடைய, காதக - கொலைத்தன்மையும், லோப - உலோபத்தன்மையு முடைய விருதாவனை - விருதாவாகக் காலங்கழிப்பவனை, நிந்தைபுலை யேனை - உலகத்தோர்கள் நிந்திதற்குரிய புலைத்தொழி லுடையவனை, காரண காரிய லோக ப்ரபஞ்ச - காரண காரியங்களால் வந்த உலக வாழ்க்கையின், சோகம எலாம அற - துன்பங்கள் முழுவதும் அறவே நீங்கப்பெற்று, வாழ்வு உற - முத்திப்பேறுறை யடைந்து இன்ப வாழ்வையடைய, நம்பில் - விரும்பினால், காசு அற - குற்ற மற்ற, வாரி - கடல்போன்ற, மெய்ஞான தவம் - உண்மை ஞானத் தோடு கூடிய தவநிலையை, சற்று அருளாதோ - (அடியேனுக்கு நினது திருவருள்) சிறிது அருள புரியாதோ?

பொழிப்புரை.

பால்போன்ற வெண்ணிறமுடைய அன்னவாகனத்தின் மீது நிலைபெற்றுள்ளவனும், நான்கு முகங்களை யுடையவனும், சிவந்த இலக்குமியின் குமாரனுமாகிய பிரமதேவனைப் பிரணவார்த்தங்கேட்டு அதனை யுரைக்காது விழித்தமையால் கரங்களால் மோதி தண்டனை புரிந்தவரே! முன்னாளில் பெரிய வடிவத்தோடு நின்ற அந்த அநுமனது தோளினமிசை யூர்ந்துவந்து போர்புரிந்து, பாவத்தொழிலை மேற்கொண்ட இராவணனது தலைகள் பத்தும் சிந்துமாறு அறுத்துத் தள்ளி, நல்லொழுக்கமுடைய விபீஷணர் (இலங்காபுரி யரசாட்சியைப் பெற்று) இன்புற்று வாழுமாறு, மணம் பொருந்திய சீதையாகிய திருமகள, ஜெயத்தா லுண்டாகிய ஜெயலட்சுமி ஆகிய இருபாவையரது தோள் புணர்ந்த திருமாமனாகிய 'நாராயணமூர்த்தியினது சிந்தைக் கினிய மருகரே! ஒழுக்கத்தால் மிக்க நாரதமுனிவர் (தணிகைமாமலை) வந்தடைந்து, வள்ளிநாயகியார் வாழ்கின்ற தினைப்புனம் இதுதான் என்று காட்ட, முன்னாளில் தேன்போன்ற மதுரமொழியுடையவரும் சந்தனமணிபவரும் இளமையுடையவரும் இன்பமலையனையவருமாகிய வள்ளிபிராட்டியாரை அணைபவரே! சேல்வாளை வரால் முதலிய மீன்கள் நீர்ப்பெருக்கால் துள்ளியெழுந்து குலைகளோடு கூடிய கமுகுகளின்மேல் தாவி விளையாடும் இன்பத்தை நல்கும் திருச்செந்திலம்பதியில் விரும்பிவாழுகின்ற கந்தக்கடவுளே! பெருமையின் மிக்கவரே! தோலால்மூடிய கூரைவீட்டிற்கு நிகராகிய இவ்வுடம்பை நிலைத்திருக்குமென நம்பி, பெண்களது வஞ்சனையோடுகூடிய காமலீலையில் மிகவும் ஈடுபட்டு நிலையின்றி சுற்றுகின்ற பொருளைத்தேடும் பொருட்டு திசைகள்தோறும் ஓடி வருத்தமுற்று நூதனமான தூது நான்மணிமாலை கோவை உலா மடல் முதலிய பிரபந்தங்களை நார்கள் மீது, அந்நாதியிலேயே அழுந்தி குற்றமுடைய மனிதர்களது வீடுகள்தோறும் சென்று அலைந்து சுழலுகின்ற காலனுக்கு நிகரானவனை வீண்பொழுது போக்குபவனை, நீதிநெறியற்ற பொய்மொழியுடன் கோளசொல்லுபவனை, பெருமையில்லாத் தீநெறியில் நின்ற நெஞ்சத்தையுடைய ஒகாலை உலோபமுதலிய தீயகுணமிக்க விருதாவனை, எல்லோராலும் நிந்திக்கப்படுகின்ற புலையனை, காரண காரிய உலக வாழ்வாலாகிய துன்பங்களெல்லாம் அறவே நீங்கப்பெற்று இன்ப வாழ்வுறுமாறு விரும்பினால் குற்றமற்ற கடலபோன்ற மெய்யுணர்வுடன் கூடிய தவநிலை அடியேனுக்கு உண்டாக தேவரீரது திருவருள் சிறிது அருள்புரியாதோ?

விரிவுரை.

தோலொடு மூடிய கூரையை நம்பி :—

இந்த உடம்பு கூரைவீட்டிற்கு நிகரானது ; கூரைவீட்டை ஓலையால் மூடியுள்ளதுபோல் இவ்வுடம்பை தோலால் மூடியுளது. ஒரு மனிதன் கல்வீடு, ஓட்டுவீடு, மாடிவீடு இவைகளில் வாழ்ந்தால் நெருப்புபயம் அதிகமின்றி ஒரு சில நாளாவது அந்த வீட்டில் சுகமே வாழலாம். கூரைவீட்டிலே யிருப்பவன் நெருப்பு காற்று மழை முதலியவைகளுக்கு மிகவும் அஞ்சிவாழுவான். கூரைவீட்டிற்கு விரைவில் அழிவுநேரும். கூரைவீடு என்றும் நிலைத்திருக்குமென நம்புதற்கில்லை ; அதுபோல் கூரைவீடனைய இவ்வுடம்பிறகும் விரைவில் அழிவு நேரும் ; பிணி முதுமை முதலியவைகள் உண்டாகிக்கெடும். இதனை நம்பியிருத்தல் பெருந்தவறு. யாக்கை நிலையாமையை யுணர்ந்து ஆன்மலாபத்தை விரைந்து தேடவேண்டும் “புல்லின் நுனியிலுள்ள நீர் எப்படி நிலைக்காதோ அதுபோல் இவ்வுடம்பும் நிலைபெறாதென்றுணர்ந்து, இப்பொழுதே அறவினையைச் செய்க ; ஒருவன் பிறந்து நாம் பார்த்திருக்கும்போதே நின்று, இருந்து, கிடந்து சுற்றத்தார்கள் அலற இறந்து படுகின்றான் ; இதனைக் கண்கூடாகக் காணுகின்றோமாதலால் இதனை நம்பியிராதே” என்ற நாலடியாரின் நல்வாக்கை யுன்னுக.

> புன்னுனிமே னீர்போ னிலையாமை யென்றெண்ணி
> இன்னினியே செய்க வறவினை—யின்னினியே
> நின்றா னிருந்தான் கிடந்தான்றன் கேளலறச்
> சென்றா னெனப்படுத லால்

இத்தகைய சரீரமாகிய கூரைவீடு இடிகின்ற காலத்தில் குமாரக் கடவுளது திருவடியே துணைசெய்யும்.

> தோலாற் சுவர்வைத்து நாலாறு காலிற் சுமத்தியிரு
> காலா லெழுப்பி வளைமுது கோட்டிக்கைந் நாற்றி நரம்
> பாலார்க்கை யிட்டுத் தசைகொண்டு மேய்ந்த அகம்பிரிந்தால்
> வேலாற் கிரி தொளைத் தோனிரு தாளன்றி வேறில்லையே
>
> — அலங்காரம்.

பாவையர் தோதக லீலை நிரம்பி :—

கூரைவீட்டிற்கு நெருப்பை எப்படி அழிவை உண்டாக்குமோ? அப்படி உடம்பிற்கு அழிவை யுண்டாக்குவது பொதுமகளிரது

போகம் ஆவி யீடேறும் நெறியை வேண்டுவார் வரைவின்மகளிரை விழையா தொழிக.

சூழ் பொருள் தேடிட ஓடிவருந்தி :—

மேற்கூறிய விலைமகளிர்க்கு பொன்கொடுத்தாலன்றி விரும்பாராதலால் பொருள் தேடும்பொருட்டு பல ஊர்களிலும் சென்று வருந்த நேரும். சிறிது கை வரண்டால் விலைமாதர் வெறுத்து விரட்டுவர்; ஓயாமல் பொருளை கொடுத்தவண்ணமாகவே இருத்தல் வேண்டும். விளக்கும் வேசையர் நட்பும் ஒன்று; விளக்கு நெய் வற்றி விட்டால் அணைந்துவிடும். அதுபோல் வேசையர் நட்பு பொருள் வற்றிவிட்டால் ஒழியும். இதனை நாலடியார் கூறுமாறு காண்க.

விளக் கொளியும் வேசையர் நட்பு மிரண்டுந்
துளக்கற நாடின் வேறல்ல—விளக்கொளியு
நெய்யற்ற கண்ணே யறுமே யவரன்புங்
கையற்ற கண்ணே யறும்

தூது :—

பாணன் முதலிய உயர்திணையோடும், கிள்ளை முதலிய அஃறிணையோடும், ஆண்பாலும் பெண்பாலும் அவரவர் காதலைச்சொல்லி தூது போய் வாவெனக் கூறுவது. கிள்ளை விடு தூது, வண்டு விடு தூது, நெஞ்சு விடு தூது முதலியவற்றைக் காண்க.

நான்மணிமாலை :—

வெண்பாவும் கலித்துறையும், விருத்தமும், அகவலும், அந்தாதித் தொடையாகப்பாடுவது; நாற்பது கவிகளால் செய்யப்படுவது. கோயில் நான்மணிமாலை, திருவாரூர் நான்மணிமாலை, நால்வர் நான்மணிமாலை முதலியவற்றைக் காண்க.

கோவை :—

இருவகைப்பட்ட முதற்பொருளும், பதினான்கு வகைப்பட்ட கருப்பொருளும், பத்து வகைப்பட்ட உருப்பொருளும், பொருந்திக் கைக்கிளை முதலுற்ற அன்புடைக் காமப்பகுதியவாம் களவொழுக்கத்தினையும் கற்பொழுக்கத்தினையும் கூறுதலே எல்லையாகக் கட்டளைத் துறை நானூறுறுல் திணை முதலாகத் துறை யீராகக்கூறப்பட்ட பன்னிரண்டாகப் பாட்டுறுப்பும் வழுவின்றித் தோன்றப்பாடுவது.

இது வெண்பா, அகவல், கலி, வஞ்சி, வண்ணம் இவற்றானும் வழங்கப்படும். திருக்கோவையார், திருவெங்கைக் கோவை, கோடீசுரக் கோவை முதலியவற்றைக் காணக.

உலா :—

இளமைப் பருவமுதல் றலைமகனைக் குலங்குடிப்பிறப்பு மங்கல பாமபரை இவற்றான் இன்னான் என்பது தோன்றத் தலைமையாய் மாதர் நெருங்கிய வீதியிடத்தவன பவனிவாப் பேதை, பெதும்பை, மங்கை, மடநதை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் ஆகிய எழுவகைப் பருவ மடநதையர்களும, கணடு காமுற்றுத தொழுத்தாக நேரிசைக் கலிவெண்பாவாற் கூறுவது.

மடல் :—

கனவில் ஒரு பெண்ணைக் கண்டு கலவியின்ப நுகர்ந்தோன் விழித்தபின் அவள்பொருட்டு மடலூர்வேன் என்பதைக் கலிவெண் பாவினால் முற்றுவிப்பது.

இத்தகைய பிரபநதங்களைப் பொருள்பெறும்பொருட்டு நற்குண மில்லா நரர்களை மட்டின்றிப் புகழ்ந்துபாடி யலைவது சில புலவரது தொழில் அங்ஙனம் அலைந்து நாதுதிசெய்து சேகரித்த பொருளைக் கொண்டுவந்து தாம் இச்சித்த போகமாதரிடந்தந்து உழல்வர்.

காலனை :—

பல வுயிர்களையுங் கருணையின்றிக் கொல்வதால் இயமனுக்கு நிகரானவனை என்றனர்.

"எவ்வுயிரு மறி வென்றிராதவ் வுயிர்க்கெலாம்
எமனுயிருந்த துட்டன"

—பாம்பன்—குமாருகுருதாச சுவாமிகள்,

வீணனை :—

நமது ஆயுளில ஒவ்வொரு கணமும விலைமதிக்கமுடியாத மாணிக்கமாம் இத்தகைய அருமையான காலத்தை இழந்துவிட்டால் மீளவும் பெறமுடியாது எத்தனைகோடி பொன்கொடுத்தாலும் கழிந்த நாள வாராது. அதனை வறிதே கழிக்காமல் ஒவ்வொரு கணமும் தெய்வ சிந்தனையுடன் தவப்பொழுதாகக் கழிக்கவேண்டும்.

"நாளாய போகாமே நஞ்சணியுங் கண்டனுக்கே
ஆளாவோம்

—ஞானசமபந்தர் தமிழ்மறை.

" போதவமே யிழந்து போனதுமான மேன்ப தறியாத
பூரியன் '

— திருப்புகழ்

நிந்தைப் புலையேனை :—

புலாலுணபவாகளே புலையர்கள், புலையர்கள் என்பது பிறப்பினு லன்று; புலைப் புசிப்புடையோர்கள் யாவராயினும் புலையரே.

" மாமிசம் தினபோரெல்லாம மானிடப் புலையர்தாமே "
என்றார் வள்ளலார்.

புலாலையுண்ணும் புலையரை யாவருங்காண இயமதூதர்கள் துன்ப மிகுந்த தீவாய் நரகில் மல்லாக்கத் தள்ளிவருத்துவர் என்ற திருமந் திரத்தைக் கண்டு தெளிக.

பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாருங் காண இயமனறன் தூதுவர்
செல்லாகப பற்றிய தீவாய நரகதநின்
மல்லாக்கத தள்ளி மறித்து வைப்பாரே

புலாலை யுண்பவன் எத்துணைச் சிறந்தவனாயினும எவ்வளவு புண்ணி யத்தைப் புரியினும பயனில்லை;

கங்கையிற படிந் திட்டாலுங் கடவுளைப் பூசித்தாலு
மங்குல் போற் கோடி தானம் வள்ளலாய வழங்கினாலும்
சங்கை யிலலாத ஞான சாததிர முணாநதிட்டாலும்
பொங்குறு புலால் புசிப்போன் போய்நரக டைவனனறே

— வள்ளலார்.

இதுவேயுமன்றி கருணையென்பது ஒரு சிறிதுமின்றி ஒரு தீங்கு மியற்றாது உபகாரம்புரியும ஆடு கோழி பன்றி மீன்முதலிய ஏழைப் பிராணிகளைக் கொன்று அவற்றின் புலாலையுண்ணும கொடியவரை, அவர்கள் கொன்ற பிராணிகளின் உடலிலுள்ள மயிர்கள் எத்துணை யுளவோ அத்துணைக்காலம் வெப்பமான நரகங்களையனுபவித்து மிக வுந் துன்புற்று, புழுககளோடு கூடிய வாயுடையவராய்த் தொழுநோய் முதலிய பிணிகளை யடைந்து உழலுவர்

கொன்று விலங்கின் தசைநுகருங்
கொடுமையோரவ் விலங்கி னுடல
துன்று மயிரேத துணையாமத்
துணைய காலம் வெங்நரகி

ஞான்றி நுகாவாய புழுவொழுக வழப்ப
ரோன்கை யுணர்ந்தேயோ
கன்று சினவெங் கொடு விலங்கும்
புலவூன் றின்னக் கருதாவால்

—சிவதருமோத்தரம்.

காரண காரிய லோக :—

உலகம் காரணம் காரியம் என இருவகைத்து. உயிர்கள் புரியும் நல்வினை தீவினைக் காரணத்தால காரியப்படுவது காரிய உலகம். இவைகட்கு காரணமாவது காரண உலகம். இவ்விரு உலகங்களின் துன்பங்களும் நீங்கவேண்டுமாயின மெய்ஞ்ஞானதவம் அவசியம் வேண்டும்.

பாலனமீது . . . . . அபராதன :—

அயனைத் தண்டித்த வரலாற்றை திருப்புகழமிர்தம் முதற்பாகம் 172-வது பக்கத்திற காணக.

வாரிய மாருதி :

விஸ்வரூபத்தை எடுத்து அருமபெருங் காரியத்தை புரிந்தோ ராதலால் அநுமாரை வாரிய மாருதி என்றனர்.

பாவி யிராவணன :—

அறன் கடை நின்றாரு ளெல்லாம்
பிறன் கடை நின்றாரிற பேதையா ரில்

என்றபடி அயலானுடைய பத்தினியைக் களவாகக் கொண்டுபோனவ னாதலால் பாவி யென்றனா.

சீரிய வீடணர் :—

சீலம், தவம், பொறை, ஈஸ்வரபக்தி முதலிய நற்குண நல்லொ ழுக்கமுடையவர் விபீஷணா.

சீலமுலாவிய நாரதர் :—

நாரதர் சுப்ரமண்ய பக்தியிற் சிறந்தவர் ; கந்தபுராணத்துத் தக்ஷ காண்டத்துக் கந்தவிரத படலததில் வெளியாமாறு, கார்த்திகை மாதத்தில் வருங் கார்த்திகை நக்ஷத்திரத்தின் முதன்னாளாகிய பரணி நாள் உதயத்தில் யாவனொருவன் நித்தியகருமம் முடித்துப் பரிசுத்த னாய் ஒருவேளை யுண்டு, மறுநாள் கார்த்திகைதினத்தன்று அதிகாலை யெழுந்து புண்ணிய நதியில் நீராடி, தூய ஆடையுடுத்தி, முருகவேளை அலங்கரித்து அருச்சித்து நீர் சந்தன புஷ்ப தூப தீப நிவேதனங்க

ளால் வழிபாடுசெய்து, முருகவேள் சரித்திரத்தை பக்தியுடன்கேட்டு உபவாசமிருந்து பகல் முழுவதும் குகசிந்தையுடன் இருந்து, இரவில் தருப்பையைப் பரப்பி அதன்மீதிருந்து அரிவையரை அணுவளவும் நினையாது அறுமுகவள்ளலின் அடிமலரையுன்னி, துயில்புரியாது தியானம்புரிந்த நிலையில் இருந்து விடிந்த உரோகணி நட்சத்திரத்தில் விடியற்காலத்தில் நீராடி நித்தியகரும முடித்து, கந்தவேளை முன் போல் வழிபட்டு, அடியார்களுடனிருந்து பாரணைபண்ணி அப்பகல் உறங்காது வைகி மாலைக்கடன் முடித்து அன்றிரா உறங்கவேண்டும இவ்வித கந்த விரதத்தை விநாயகமூர்த்தி பணித்தவாறு, நான்முகன் மகனாகிய நாரதமுனிவர், பன்னிரண்டாண்டு ஆற்றிக் கந்தவேளைத் தரிசித்துத் தேவ இருடிகளில் முதன்மைப்பேறு பெற்றனர். இவர் வள்ளிநாயகியை மணமபுணருமாறு விண்ணப்பம்புரிய, அவரை வழி காட்டுமாறு செய்து வள்ளிநாயகியை வரைபகவெறிந்த வடிவேலண்ணல் மணம்புரிந்துகொண்டனர்

இதன தத்துவம் :—

வள்ளி யென்பது ஜீவான்மா ; முருகன் பரமான்மா ; நாரதர் வள்ளியினது தபோ சக்தி , தபோ சக்திதான் ஆண்டவனை அருள் புரிய அழைத்துவரும். வள்ளிநாயகியார் திருமண தத்துவத்தைப் பின்னர் விரிவாக விளக்குவாம்.

சேலோடு . . . . சீரலைவாய :—

திருச்செந்தூரில் நீர்வள மிகுந்திருப்பதால் வயல்களில் வாழும் வாளை முதலிய மீனினங்கள் துள்ளிக்குதித்து கமுகுகளில் தாவி விளையாடுகின்றன.

கருத்துரை.

நானமுகனைத் தண்டனை புரிந்தவரே ! இராவண சம்மாரம்புரிந்த இரகுவீரரது மருகரே ! நாரதனாபுகல் வள்ளிபிராட்டியை மணநத வரே ! செந்திமாநகரததில வாழும கந்தமூர்த்தியே ! பெருமையின் மிக்கவரே ! தோலால் மூடிய சிறுகுடிலை நம்பி, மாதர் மயலுற்று, பொருள்தேடுமாறு நாதுதிசெய்து அலையும் தீயவனாகிய அடியேன் விரும்பினால் உலக துன்பமற மெய்ஞானதவத்தைத் தமது திருவருள் சிறிது உணடாக்கச் செய்யாதோ ?

ஓம் ஸுப்ரஹ்மண்யாய நம:

ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய புஜங்க ஸ்தோத்திரம்.

(ஆதிசங்கரர் அருளிச் செய்தது)

(110-ம் பக்கத் தொடர்ச்சி.)

विधौक्लुप्तदण्डान् स्वलीलाधृताण्डा-
न्निरस्तेभशुण्डान् द्विषां कालदण्डान् ।
हतेन्द्रारिपण्डान् जगत्त्राणशौण्डा-
न्सदाते प्रचण्डान् श्रीये वाहु दण्डान् ॥

(12) விதௌ4 க்லுப்த த3ண்டா3ஸ்வலீலாத்4 ருண்டான்
நிரஸ்தே4ப சுண்டா3ன் த்4விஷாம காலத3ண்டான் ।
ஹதேந்த்ராரி ஷண்டான் ஜக3த்ராண சௌண்டா3ன்
ஸ2தாதே ப்ரசண்டான் ஸ்ரயே பா3ஹூ த3ண்டான் ॥

பதவுரை.

ஹேஸ்கந்த ! - ஓ ஸ்கந்தமூர்த்தியே !

விதௌ - பிரமதேவன் விஷயத்தில் (பிரமதேவனை),

க்லுப்ததண்டான் - செய்யப்பட்ட தண்டனையை யுடையதும (தண்டித்தவைகளும),

ஸ்வலீலாத்ருதண்டான் - விளையாட்டாகவே அண்டங்களைத் தாங்குகின்றவைகளும்,

நிரஸ்ததேபசுண்டான் - அழகிலே திரஸ்கரிக்கப்பட்ட யானைத்துதிக்கைகளை யுடையவைகளும் அல்லது யுத்த காலத்தில் அசுரர்களின் யானைகளின் துதிக்கைகளை வெட்டி யெறிந்தவைகளும்,

த்விஷாம் காலதண்டான் - பகைவர்களுக்குக் காலனின் தண்டாயுதம் போன்றவைகளும,

ஹதேந்த்ராதிஷண்டான் - கொல்லப்பட்ட அசுரர்களை யுடையவைக ளும (அசுரர்களை அழித்தவைகளும),

ஜகத்ராண சௌண்டான் - உலகத்தை யிரட்சிப்பதில் சமர்த்தங்களும,

ப்ரசண்டான் - பெரியவைகளுமான,

தே பாஹுதண்டான் - தேவரீருடைய கைகளை,

ஸதா - எப்போதும,

ஸ்ரயே - ஆஸ்ரயிக்கின்றேன.

பொழிப்புரை.

பிரமதேவனைச் சிறையிலடைத்தவைகளும் விளையாட்டாகவே அண்டங்களனைத்தையும் தாங்குகின்றவைகளும யானைகளின் துதிக் கைகளுக்கொப்ப அழகுவாய்ந்தவைகளும அல்லது அசுரர்களால் ஏவப்பட்ட மதயானைகளின் துதிக்கைகளை அறுத்தெறிந்தவைகளும் அசுரர்களை அழித்தவைகளும உலகத்தைக் காக்க வல்லவைகளும பெரியவைகளும் ஆன தேவரீரது திருக்கரங்களை எப்போதும ஆஸ்ரயிக்கின்றேன. இதனால் இத்தகைய திருக்கரங்களைத் தியானிக்கும் அடியவர்களுக்கு திவ்வியஞானமும சத்துருஞானமும அபீஷ்ட சித்தியும் உண்டாகும் என்னும உண்மையை உணர்த்தப்பட்டதோடு பிரணவத்தின் பொருள் தெரியாவிடினும வீணே செருக்கு படைத்த பிரமனைப்போல் அகங்காரத்தையுடைய ஜீவர்கள் துன்பப்பட நேரும் என்பதும் அறிவுறுத்தப்பட்டது,

सदाशारदाः षण्मृगाङ्का यदिस्युः
समुद्यन्त एव स्थिता श्चेत् समन्तात् ।
सदा पूर्णबिम्बाः कलङ्कैश्चहीना
स्तदात्वन्मुखानां ब्रुवेस्कन्द साम्यम् ॥

(13) ஸதா சாரதா: ஷண்ம்ருகாங்கா யதிஸ்யு:
ஸமுத்யந்த ஏவஸ்திதாஸ்சேத் ஸமந்தாத் ।
ஸதாபூர்ண பிம்பா: கலங்கைஸ்ச ஹீநா
ஸ்ததா த்வன்முகானாம் ப்ருவேஸ்கந்த ஸாம்யம் ॥

பதவுரை.

ஹே ஸ்கந்த ! - ஓ கந்தமூர்த்தியே!
ஸதா - எக்காலத்தும்,
பூர்ண பிம்பா: - பூர்ணபிம்பங்களை யுடையவைகளும்,
கலங்கை:ஹீநா: - களங்கமின்றியவைகளும்,
ஸாரதா: - சரத்காலத்தியவைகளும் ஆன,
ஷட்ம்ருகாங்கா: - ஆறு சந்திர பிம்பங்கள்,
ஸமந்தாத் - நான்கு பக்கமும்,
ஸமுத்யந்த யதிஸ்யு: சேத் - உதித்துக்கொண்டிருப்பவைகளாக இருக்குமேயானால்,
ததா - அப்போது,
தவ முகாநாம் - தேவரீரின் திருமுகங்களுக்கு,
ஸாம்யம் - ஸமானத்தன்மையை (ஒப்பை),
ப்ருவே - கூறுவேன்.

பொழிப்புரை.

ஓ கந்தபெருமானே! சரத்காலத்திய ஆறு பூர்ண சந்திரர்கள் களங்கமின்றியவைகளாய் நான்கு பக்கமும் உதித்துக்கொண்டிருக்குமேயானால் அப்போது தேவரீரது திருமுகங்களுக்கு ஒருவாறு ஒப்பிட்டுக் கூறுவேன். இதனால் சுவாமியின் திருமுகங்கள் ஒப்பற்றவைகளென்றும் தியானிப்பவர்களின் ஆத்யாத்மிகாதி தாபத்திரயங்களைக் கெடுத்து ஆனந்தத்தைக் கொடுக்கவல்லவைகளென்றும் பெறப்பட்டது.

स्फुरन्मन्दहासैः सहं सानि चञ्च-
त्कटाक्षावलीभृङ्गसङ्गोज्ज्वलानि ।
सुधास्यन्ति बिम्बाः धराणीश सूनो
तवा लोकये षण्मुखाम्भोरुहाणि ॥

(14) ஸ்பு[2]ரன்மந்த[3]ஹா ஸைஸ்ஸஹம் ஸானி சஞ்சத்
கடாக்ஷாவலீப்ரு[4]ங்க[3] ஸங்கோஜ்வலானி ।
ஸுதா[4]ஸ்யந்தி பி[3]ம்பா[3] த[3]ராணீச[4] ஸூனோ
தவாலோகயே ஷண்முகா[2]ம் போ[4]ருஹாணி ॥

பதவுரை.

ஹே ஈஸஸூநோ - பரமசிவனுடைய புத்திரனே;
ஸ்புரன் மந்தஹாஸை: - பிரகாசியாநின்ற புன்முறுவல்களாகிய அன்னப்பட்சிகளையுடையனவும்,
சஞ்சத் கடாக்ஷாவலீ ப்ருங்க ஸங்கோஜ்வலானி - அசையநின்ற கடாக்ஷங்களாகிய வண்டுகளால் அழகியனவும்,
ஸுதாஸ்யந்தி பிம்பாதராணி - சந்திரபிம்பங்களைத் தாழ்மைப்படுத்துகின்றனவும் அல்லது அமிர்தம் சொட்டுகின்றனவும் கோவைப்பழம்போன்று சிவந்திருப்பனவுமாகிய இதழ்களையுடையனவும் ஆகிய,
தவ - தேவரீரது,
ஷட் - ஆறு,
முகாம்போருஹாணி - திருமுகங்களாகிய தாமரைப்பூக்களை,
ஆலோகயே - தரிசிக்கின்றேன்

பொழிப்புரை.

புன்சிரிப்புடையவைகளும் அடியவர்களுக்கு ஏதேனும் ஆபத்துண்டாவென்று எப்போதும் கவனித்துக்கொண்டேயிருப்பதனால் அசைந்துகொண்டிராநின்ற கடாக்ஷத்தையுடையவைகளும் சந்திர பிம்பத்தையும் கோவைப்பழத்தையும் அழகினால் தோற்கடிப்பவைகளும் ஆகிய தேவரீரது முகாரவிந்தங்களை தரிசிக்கின்றேன். இதனால் இத்தகைய முகாரவிந்தங்களைத் தியானிக்கும் அன்பர்கள் நித்தியாநித்ய வஸ்துவிவேகம் வைராக்கியம் ஸாதுஸங்கம் முதலியவைகளையடைந்து மோட்சத்தையுமடைவார்கள் என்னும் உண்மையை உணர்த்தப்பட்டது.

(தொடரும்.)

ஓம் குஹாயநம:

கந்தர் திருவிளையாடல்

(116-ம பக்கத் தொடர்ச்சி)

மோன நீங்குதல்.

திசைமுகனாதி தேவர்கள் மன்மதனை எரிந்து நீறாயினதையும், சிவமூர்த்தி முன்போலவே மௌனத்துடன் வீற்றிருந்ததையுங்கண்டு, உடல் வியர்த்து, உள்ளங்கலங்கி, விழிநீர் பெருக்கி, மெய் நடுங்கி, துன்பக்கடலில் அழுந்தி, அழுதார்கள். "நமது அல்லல் அகலும் பொருட்டு ஆவமுண்ட அண்ணலிடம் மன்மதனை யேவினேம். அரனார் அவனைப் பொடிபடுத்தினார், மோனநிலையினின்றும் நீங்கினாரில்லை. அந்தோ! இனி என் செய்வோம்?" என்று புலம்பினார்கள். "காமனை எரித்த கண்ணுதலுடைய மௌனநிலையை உபாயத்தினால் மாற்றுதல் முடியாது; அவர் நம்மைத் துன்பத்தினைத் துடைத்து இன்பத்தை நல்கிக் காத்தருளவேண்டுமாயின், நாம் அவரைத் துதிப்பதே கடன்" என்று எண்ணி அயன் முதலிய அமரர்கள், கயிலைமலையின்மேற் றிகழும் கோபுரத்தின் புறத்தே சென்று துதிக்கலானார்கள். மங்கை பாகா! சொற்பதங்கடந்த அற்புதா! மூவருமறியா முழுமுதலே! கடல்நஞ்சை யருந்தியும், கங்கையைச் சூடியும், நெற்றியில் கனல்விழியைப் படைத்தும், கொடிய அவுணர்களைக் கொன்றும், முன்னாளில் எளியேங்களைக் காத்தருளினீர் இத்தருணம் கைவிடுவீரேல் மைந்தர்களாகிய எமக்குத் தந்தையாகிய தேவரீரையன்றி புகலிடமாவார் யாவர்? அடியர்கள் குற்றமேசெய்யினுங் குணமெனக்கொள்ளும் குன்றவில்லியே! உமது பூங்கழலே சரணமென்றடைந்தேம். நாங்கள் நாடோறும் சூரபன்மனாலே துன்புற்றுமாளலாமோ? எமது இடரைச் சிறிதேனும் நினைந்தருள்புரியீரா? எந்தையே! அம்பிகையைப்பிரிந்து யோகநெறியைக் காட்டியது உமக்கு ஓர் கணப்பொழுதேயாகும்; எமக்கு எண்ணிலா யுகங்கள் சென்றன; இன்னும் தாங்கள் புறக்கணித்திருக்கில் யாம் எவ்வாறு உய்வோம்? திருமால் முதலிய அனைவரும் உம்மை நோக்கி அருந்தவம்புரிந்து உமது அடிமலர்களை அர்ச்சிக்க, தேவரீரே இப்பதவி

களையும் எனைய நலன்களையும் தந்தருளினீர். தோற்றமின்றியே ஐந்தொழிலியற்றிய தொல்லோய்! நீர் கொண்ட தவநிலை எம்பொருட்டேயன்றோ? அடியேங்கள் செய்த தீவினையால் தினந்தோறும் துன்பமாகிய வாளால் துணிக்கின்றீர்; இனி எங்களைக்காப்பாற்றுதல் அல்லது அழித்துவிடுதல்; இந்த இரண்டில் எது உமக்குத் திருவுளமோ அதைபுரியும் தேவ தேவ! உமாதேவியை மணந்து எமது இடரைக் களைவீரென்று அறிவிலிகளாகிய அடியேங்கள் மதனனை யனுப்பினோம். அவனை எரித்து முன்போலவே மோன நிலையில் எழுந்தருளியுள்ளீர், இங்கு யாம் இடர்ப்பட்டு அழிவது தக்கதோ? இனியேனும் சிறிது திருவுளமிரங்கிக் காத்தருளல்வேண்டும். நரசிங்க முதலிய விலங்குகளை உரித்து அவற்றின் தோல்களைத் தரித்தீர்; தக்கனது பெருமகத்தை வீரபத்திரரைக்கொண்டு தடிந்தீர்; அதுபோல் சூராதியவுணர்களைத்தொலைத்து எமது துன்பத்தை துடைத்தல்வேண்டும்" என்று முறையிட்டார்கள்.

பிரமாதி தேவர்கள் அழலிடைப்பட்ட மெழுகென உருகி அழுது தொழுது காமுற்று அரற்றித்துதித்தலும், அவர் பாவந் தொலையுஞ்சமயம் நெருங்கிவிட்டதால் திருவுளமிரங்கி, நந்தியை நினைந்தனர். அதனையுணர்ந்த நந்திதேவர் இறைவன்முன் சென்று இறைஞ்சி நிற்க, சிவமூர்த்தி "அம்புயனாதி அமரர்களை நம்முன் அழைத்து வருதி" என்றனர். நந்தியங்கடவுள் கோபுரவாயிலையடைய பங்கயனாதியோர் பணிய" நந்திதேவர் "வருந்தன்மின், உம்மை யழைத்துவருமாறு கண்ணுதற்பெருமான் கட்டளையிட்டனர்; வாருங்கள்" என்றனர். அவ்வார்த்தை அமுதஞ்சொரிவது போல் செவியில் நுழைதலும் தேவர்கள் உவப்புறுமகிழ்வெய்தி, சிவமூர்த்தியைத்துதித்து ஆடினார்கள். நந்திதேவர் அவர்களை அழைத்து சிவசந்நிதியில் விடுத்தனர். தேவர்கள் மதிமுடிப்பரமனைப் பலகாலும் பணிந்து, பூதநாத! பொருவிடைப்பாக! சிவசிவ! ஹரஹர! என்று துதித்து நின்றனர்கள். புரமெரித்த புண்ணியன் "துன்பத்தையும் விண்ணப்பத்தையும் விளம்புமின்" என்றனர்.

தேவர்கள் "அருட்பெருங்கடலே! அநேக யுகங்களாக சூரனது ஆணையால் அலக்கணுற்று வருந்துகிறோம்; தங்களையன்றி எமது துன்பத்தை நீக்குவோர் யாவருளர்? சூராதியவுணரையழிக்க வல்ல ஓர் குமாரரைத் தந்தருளும் வண்ணம், இமயமால்வரையில் தவம் புரியும் மரகதவல்லியை மணமுடித்தருளல் வேண்டும்" என்றுகூறி

எம்பெருமான் இணையடிமேல் வீழ்ந்து வேண்டினார்கள். மதிமுடிப் பரமன் "அன்புடையீர்! வருந்தாதீர்; உங்கள் பொருட்டு மலை மங்கையை மணந்து உமது வருத்தத்தை மாற்றுதும். நீவிர் நுமது இருக்கை செல்லுமின்" என்றருள்புரிந்தனர். தேவர்கள் மகிழ்ந்து வணங்கி மேருமலையைச் சேர்ந்தனர்கள்.

அதுகண்ட இரதிதேவி எம்பெருமான் திருமுன்னர் வந்து வணங்கி "முறையோ! முறையோ!' எப்பொருட்கும் இறைவ! பங்கயனாதி பணாவா ஏவலினாலே எனது நாயகன் தேவரீர்மீது மலர்க்கணைகளை ஏவி அழிந்தனன் அவன்புரிந்த குற்றத்தைத் திருவுளங்கொள்ளாது அருள்புரிதல்வேண்டும்" என்று முறையிட்டனள். சிவபெருமான் கருணைகூர்ந்து "இரதியே! நீ புலம்பற்க; மலையரயன் தந்த மரகதவல்லியை யாம் மணம்புரியும்போது நினது பதியை உயிர்ப்பித்தருளுவேம்; சிந்தாகுலமற்று செல்லுதி" என்றனர். இரதிதேவி இறைவனை இறைஞ்சி இமையவரை சென்று ஒருபுறத்தே மேகத்தின் வரவை நோக்கும் மயில்போலிருந்தனள்.

சிவபெருமான் மலைவளர்காதலியை மணம்புரிவானுன்னி "சனகாதி நால்வரை நோக்கி "மைந்தர்களே! சிவஞானமென்பது வாய்விட்டு சொல்லுந் தகையதன்று; அது இவ்வாறு மௌனத்தோடிருந்து நம்மை அறிவதேயாம்" என்று கூற; முனிவர்கள் தெளிவடைந்து தேசிகேசனாந் தேவதேவனைப் பன்முறை வணங்கி "எந்தாய்! அடியேங்கள் மயக்கமறறு தெளிவடைந்தேம்; ஆவியீடேறும் வகைபெற்றுய்ந்தேம்" என்று புகழ்ந்து போற்றினர். கறைமிடற்றண்ணல் "இனி நீவிர் இவ்வாறு சிவயோகத்திருந்து எமது சிவகதி சேருமின்' என்று விடைதந்தனுப்பினா.

அம்பிகையின் தவநிலையறிதல்.

தண்ணருள் நிறைந்த கண்ணுதறகடவுள், இமயவெற்பின்மீது மாதவம்புரியும் மலைமகள் தமதுமீதுள்ள தலையன்பையும் காதலையும் உலகிற்கு உணர்த்துமாறு திருவுளங்கொணடு, சிவந்தவுடையும், சிகையும், திருநீறுபூசிய திருமேனியும், பூணூலும், கையில் கமண்டலமும், மழையையும் பனியையும் வெய்யிலையும் காக்கும் ஓலையையும், தண்டும் உடைய முதிய அந்தணவடிவங்கொண்டு பார்வதியம்மையாரது தவச்சாலையை யடைந்தனர். வாயில்காக்கும் மகளிர்கள் பலர் "இவர்

தூய வயோதிகர்" என்று வந்து அவரை வணங்கிநின்று "தளர் நடையுடைய பெரியவரே! இப்பனிமலையின்மீது வருதல் எளிதன்று; தாங்கள் வந்த காரியம் யாது?" என்ன அந்தணர் "நேரிழையீர்! மலைவளர்காதலியாகிய பார்வதியின் தவத்தைக் காணும்பொருட்டு வந்தேன்" என்றனர். சில மாதர்கள் உடனே உமாதேவியிடஞ் சென்று கிழவேதியரது வரவை விண்ணப்பஞ்செய்ய; அம்பிகை "அவர் முதியவராயின் இங்கே அழைத்துவம்மின்" என்று கட்டளையிட, சேடியர் அவ்வந்தணரை அம்மையார்முன் விடுத்தனர். அவரைக்கண்டவுடனே அம்மையார் "இவர் எம்பிரானுடைய அடியவர்" என்று பத்தியுடன் வழிபாடுசெய்து பணிந்தனர். உமையம்மையாருக்கு மெய்த்துணையாயுள்ள விசயை என்பவர் ஓராசனமிட்டு அதில் பெரியவரை இருத்தினள். உமை ஒருபுறத்தில் ஒதுங்கி நின்றனர். அருந்தவக்கிழவர் அம்பிகையை அன்புடன் பார்த்து "பெண்மணியே! அளவிடற்கரிய நின் அழகு குன்றவும், உடல் தசை வாடவும், யாது குறித்துத் தவம்புரிகின்றனை? நின் விருப்பம் என்னை? கூறுதி" என்றனர். மலைமகள் விசையையின் முகத்தை நோக்கி, குறிப்பினால் "நீ இவருக்கு எதிர்மொழி இயம்பக்கடவாய்" என்று கண்காட்ட, விசையை அக்குறிப்பையுணர்ந்து, "அருந்தவ அடிகளே! கண்ணுதற்கடவுள் தன்னை மணந்து தன்னிடமிருத்திக் கொள்ளும்வண்ணம் இவ்வம்மையார் தவம்புரிகின்றனர்" என்றுரைக்க, முதியவர் முறுவல்செய்து மொழிந்தருளுவர்.

புவியளித்தருள் முதல்வரு நாடரும் புனிதன்றான்
இவள் தவத்தினுக் கெளியனோ எய்தினு மிளையாளை
அவன் விருப்போடு வரையுமோ உமையவ ளறியாமே
தவமியற்றினள் எளியனோ சங்கரன் தனக்கம்மா.

பொற்றொடி! மாலு மயனும் காண்டற்கரிய மறைமுதற்கடவுள் இவள் தவத்திற்கு இரங்கி வருவனோ? அங்ஙனம் வந்தாலும் இவளை விரும்பி திருமணங்கொள்வரோ? என்னே பேதைமை? உமையவள் இதனையறியாது தவமியற்றினள். சிவமூர்த்தி எளியனோ? அளக்கரிய துன்பத்துடன் இவள் செய்யுந்தவத்தினாலாகிய பயன் ஒன்றுமில்லை. ஒருவராலும் அடைதற்கரிய பரம்பொருள் இவளுக்கு எளிதாகுமோ! பன்னெடுநாள்களாக தவஞ்செய்து வீணே உடல் நலத்தையும் கட்டழகையும் பாழ்படுத்தினள். விரைவில் இத்தவத்தை விடுவதே நலம்" என்றார். இதனைக்கேட்ட இமயவல்லி "அந்தோ!

இவர் எம்பிரானுக்கு அன்பர்; முதியவேதியர் என்று எண்ணினேன் இவர் இப்படிப்பட்ட கொடுஞ்சொற்களைக் கூறுவரென்றுணராமற் போனேன" என்று சினங்கொண்டு, பெருமூச்செறிந்து. நாணத்தை நீக்கி மனம்பொறுக்கமுடியாததால் கூறலாயினர். "ஐயா! ஆதியும் அந்தமு மில்லாத ஐம்முகச்சிவனார் எனது விருப்பத்தை நிறைவேற்றுது விடுவாராயினும் யான் இத்தவத்தை விடுவனோ? ஒருபோதும் விடேன். இன்னும் அளவில்லாத கடுந் தவத்தைச் செய்து உயிர் விடுவேன். நீ மிகவும் கிழத்தன்மையை யடைந்ததால் மயக்கமுற்றாய்; நீ என்ன பித்தனோ?" எனறனள். எல்லாவுயிர்களையுமீன்ற இளமுலை நாயகி இவ்வாறுகூற, கிழவேதியர் மீளவும் ஓர் தன்மையை உன்னி உமாதேவியை நோக்கி "பெண்ணே! நீ விரும்பிய விடையவனது வளங்களை நன்றாகக் கேட்டிலாததில் போலும்; யான் உணர்த்துவன்; கேள்

ஆடைதோல் விடை யேறுவ தணிகலம் அரவென்பு
கேடில வெண்டலை மாலிகை கேழலின் மருப்பினன
ஓடு கோள்கலம் ஊண்பலி வெயநஞ் சுவப்புறரோ
காடதே நடம் புரிபிடங் கண்ணுதற் கடவுட்கே

பெண்மணியே! சிவனுக்கு ஆடை தோல்; வாகனம் எருது; ஆபரணம் பாம்பு, எலும்பு தலைமாலை, பன்றிக் கொம்பு முதலியன; உண்ணுகின்ற பாத்திரம் தலையோடு; உணவு பிச்சையும் விஷமும்? ஆடுகின்ற இடம் சுடுகாடு; தரித்துக்கொள்வன வெள்ளெருக்கு, அறுகு, கொன்றை, நொச்சி, ஊமத்தம், கங்கை, பாம்பு முதலியன பல; சந்தனம் சாம்பல்; கையிற்பிடித்திருப்பன சூலம், மான், மழு, உடுக்கு, அக்கினி முதலியன; சூழ்ந்துளசேனை பூதங்கள்; மேலும் அச்சிவனுக்கு தாயுமில்லை தந்தையுமில்லை; தமருமில்லை; குணம் குறி செயல் குலம் என்பனவு மிலலை; அவனுக்குரிய பெருமைகள் இவை களே. இவைகளெல்லாம் உன்னுடையனவாகும் பொருட்டோ நீ இவ்வாறு பெருந்தவம் புரிந்து இளைத்தனை! மிகுந்த சிறப்புடைய மன்னர் மன்னனது மகளாகிய உனக்கு இது இயையுமோ? ஆதலால் தவத்தை விரைவில் விடுப்பாயாக" என்றனர். திரிபுரமெரித்த திங்கள் வேணியனது வசனங்களைக் கேட்டவுடனே அகிலாண்ட நாயகி கரங்களால இரு செவிகளையும் பொத்தி, "சிவ சிவ" என்று கூறி துக்கமும் சினமுங் கொண்டு பார்ப்பனனே! கேள். எமது பிரானு

கிய என்டோளன்னையிடம் நினக்கு சிறிதாவது அன்பில்லை, நீ இச்சிவவேடங்கொண்ட தன்மை வேடுவன் காட்டில் பறவைகளைப் பிடிக்கும் பொருட்டுப் புதலை மேற்கொண்டமை போலும், முற்காலத்தில் சிவபக்தி யில்லாத தக்கன் உன்னைப்போல, நெற்றிக்கண்ணனுடைய நிமலனை நிந்தித்துப் பேசியதும் அதனால் அவனடைந்த அலக்கணும் நீ கேட்டதில்லையோ? அந்தோ! எம்பிரானை இவ்வாறு என்முன் இகழ்ந்தாயே! நீ இந்நாள்வரை மாசறு மறைகளைச் சிறிதும் ஆராய்ந்திலைபோலும்? பசுபதி ஒருவரே பரம்பொருள் என்று வரையறுத்துக் கூறுகின்ற வேதங்களைப் பாரப்பனர்கள் ஓதினாராயினும், அம்மறை நெறியில் நில்லாது, பொல்லா வொழுக்கத்தையே மேற்கொண்டு, முக்கண் மூர்த்தியை யிகழ்ந்து அத்தீவினையால் முத்தியடையாது பிறப்பிறப்பென்னும் பெருங்கடற்பட்டுழலும்வண்ணம், முன்னாளிலே முனிச்சிரேட்டர்களாலே மறையவர் பெற்ற சாபம் நின்னையும் மயக்காமல்விடுமோ? உலகங்களுக்கெல்லாம் தந்தையாய்த் தங்களைப் பெற்றுத் தங்கள் தொழிலுக்குத் தலைவனாய இன்றியமையாப்பெருமையையுடைய இறைவனாகிய சிவபெருமானை நீங்கி, தனது கணவனை விட்டு அயலானை மருவிக் கற்பிழந்த மாதரைப்போலும் வேதியரது முறைமையே நீ செய்தாய்; உன்னை யான் வெறுப்பதில் என்ன பயன்? ஆயினும் வேதியர்கட்குள் வேதத்தில் விதித்தபடி விபூதி உருத்திராக்கமாதி சிவச்சின்னங்களைத் தரித்து சிவபெருமானுக்குத் தொண்டுசெய்வாரும் உண்டு; நீ அவர்களைப்போலச் சிவச்சின்னங்களைத்தரித்தும் சிவநிந்தை செய்தாயென்னின், அசுரர்களுள்ளும் நின்னைப்போல் தீயவரில்லை, வேண்டுதல் வேண்டாமையில்லாத விமலனை ஈண்டு நீ இகழ்ந்தனவெல்லாம் சர்வஜீவதயாபரனாகிய சங்கரன் ஆன்மாக்கள் உய்யும்வண்ணம் கருணைப்பெருக்கால் பூண்டருளுங் குறிகளென்று அறியக்கடவாய். இவையெலாம் எம்பிராற்குப் புகழேயாம். அப்பரமபதியினது இயல்பனைத்தும் அறியவல்லார் யாவர்? அறிவிலியே நீ இகழ்ச்சிபோல இயம்பியவனைத்தும் மாலயனாதிவானவர்கள் தம்மை வழிபட்டுத் துதிக்க அவர்களுக்கு ஆற்றலையும் அதிகாரத்தையும் நல்கிய முழுமுதற்கடவுள் விருப்பும் வெறுப்புமின்றி ஆன்மாக்களுக்கு அருள்புரியும் நிலையே என்று நினை. ஆரணமாதி அறிவு நூல்களும் இவ்வாறே கூறுகின்றன. இவற்றையெலாம் தெளிந்த மெய்யறிவுடைய மேலோர்களுணர்வார்கள். சிவநிந்தை புரியும் மகாபாவியாகிய உனக்குச் சொல்லப்படாது; சொன்னாற்

பாவம்; பொய்வேடங்கொண்டவனே! நீ விரைவிற் புறத்தே போய் விடு" என்று கூறினர்.

அறம்வளர்த்த நாயகியை நோக்கி அரனார் "பெண்பாவாய்! உன்மீது காதல்கொண்டுவந்த என்செயலைக் கேளாது புறத்தே போ என்று கூறுதல் தருமமோ? நான் இங்கு வந்தது மறைமுறைப் படி உன்னை மணங்கொள்ளும்பொருட்டேயாம்" என்றனர். உள்ளங் கவர்கள்வனது வாசகத்தை மலைமங்கை இருசெவிபொத்தி விம்மி யழுது, மெய்ப்பதைத்து, "இக்கிழவன் போகான்; நானே போவேன்" என்று பஞ்சினுமினிய பாதத்தாமரை சிவக்க ஆங்கு ஓர் புறத்திற் போதலுற்றனர். அம்மையாரது தவவுறுதியையுந் தனிப் பெருங்காதலையுங் கண்ட சிவமூர்த்தி வடிவிலாக் கருணைகூர்ந்து வேதியர் வடிவத்தை நீங்கி, சிவகணங்கள் சூழ்ந்து துதிக்க, விண்ணிடை விடைமேல் தோன்றினர். அம்மையார் ஆண்டவனைக்கண்டு திருமேனி நடுங்கி, நாணங்கொண்டு, பன்முறையும் பணிந்து எழுந்து கைகூப்பி நின்று, மட்டற்ற மகிழ்ச்சியுடன் போற்றி "அளவற்ற அறிவினாலும் எட்டாத ஆதியே! அருட்பெருஞ் சோதியே! தேவரீரது மாயையை யுணரேன், சிறிதும் அறிவில்லாப்பேதை உம்மை யிகழ்ந்தமையைப் பேரருளாற் பொறுத்தருளல்வேண்டும்" என்று குறையிரந்தனர். கயிலைக்கடவுள் "நற்றவ நங்காய்! நீ நம்மிடத்துள்ள அன்பின்பெருக்கால் முன்னே சொல்லியவெல்லாம் துதியாகவே கொண்டாம்; உன்னிடம் குற்றமுண்டாயினன்றே நாம் பொறுத்தல்வேண்டும்; இனி கொடுந்தவத்தால் வருந்தவேண்டா; நாளை நின்னை மணஞ்செய்துகொள்ள வருவேம்" என்று புனித வாய் மலர்ந்து மறைந்தருளினார். அம்மையார் சிந்தை மிகமகிழ்ந்து சிவமூர்த்தியை நினைந்து துதித்துக்கொண்டிருந்தனர். சிலமகளிர் மலையரையனிடம் சென்று மழுவாளிவந்து திருவருள் செய்தமையைத் தெரிவிக்க, இமவான் கவலைநீங்கிக் களித்து தன்மனைவியாகிய மேனையோடு சென்று ஞானம்பிகையைத் தன்கோயிலுக்கு அழைத்துக்கொண்டு சென்றனன்.

(தொடரும்.)

ஓம் குஹாய நம :

கற்பு

(58-வது பக்கம் தொடர்ச்சி)

பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு.

பெண்மக்கள் தம்மையெய்திய கணவனை வழிபடுகின்ற செந்நெறியைக் கடைப்பிடித்து வாழ்வாரேயாமாயின் தேவர்கள் வாழுகின்ற தெய்வலோகத்தில அத்தேவர்கள் பெருஞ்சிறப்பினைப் பெற்று இன்புற்று இனிது வாழுவார்கள். கணவனை வழிபடுகின்ற காரிகையர்களுக்கு இம்மையில புகழும், மறுமையில் முத்திநலனும உண்டாகும். கற்புடைய மனைவியை யுடையோனுக்கு கிடைக்கத்தகாத பொருள் மூவுலகிலு மிலலை. கற்புடையவள் வாழுகின்ற மனையே மனை; மற்றது புலிவாழுகின்ற புதர் நாயகனுக்குப் புகழ், அழகு, செல்வம், கல்வி, ஞானம், பாக்கி முதலிய எல்லா நலன்களும கற்புடைய மனைவியினாலேயே உண்டாகும. கற்புடை மனைவியையுடையவனுக்குத் துன்பம எக்காலத்தும நேராது; நேர்ந்தாலும் விரைவில் நீங்கும். பெண்கள் கணவனைப் பிரிந்திருத்தல் கூடாது. ஒரு சமயம் தொழில்காரணமாக வெளியூர் செலல நேர்ந்தால் நாயகன் சென்ற இடத்தில் அவனுக்கு வழியில் இன்னல் நேராமலும் இன்பம் உண்டாகவும் இறைவனை வணங்குதல் வேண்டும. பெண்டிர்க்குத் தமது கணவனுடன் ஒருமித்து வாழும இன்பத்தைக்காட்டிலும் உயர்ந்த இன்பம் சுவர்க்கலோகத்திலுமில்லை. நாயகனுடன உறைவது வன வாசமேயாயினும் இந்திரலோகவாசமென எண்ணுவது உயர்குலப் பெண்டிரது இயல்பு.

ஸ்ரீராமர தந்தைசொற்படி பதினான்குவருடம் அரண்யவாசத்திற்காக சடைமுடியுடன் சீதை வாழுகின்ற திருமாளிகையடைந்தனர். கணவனைக்கண்ட கட்டழகின் மிக்கசீதை எழுந்து தொழுது "நமது நாயகனுக்கு இன்று மகுடாபிஷேகமல்லவா? அந்தக்காலமும் அகன்றுவிட்டதே? மகுடாபிஷேககோலமின்றி மரவுரியுடன் சடா

வெளியோடு விளங்குகின்றனரே? காரணம் யாது?" என்று ஐயுற்று ரகுநாதரை நோக்கி "ரவிகுல திலக! சிந்தை குடிகொண்ட செல்வ! மணிமகுடந்தாங்குதற்கென இருந்த நீர், சடைமுடியுடன் தோன்றிய காரணம் என்னை? என்ன துன்பம் நேர்ந்தது? கூறியருளல்வேண்டும்" என்றனள் மரகதவண்ணான் மனைவியைநோக்கி, "என் அருமைத்துணைவனாகிய இணையற்ற பரதன் ஆழிசூழ் அவனி முழுவதையும் அரியணை வைகி யரசாளுவன்; தாய்தந்தையராகிய இரு முதுகுரவர்ஆணை மேற்கொண்டு யான இன்று காடுசெல்வேன; மலைகள் அடர்ந்த கானகத்தில் தங்கியிருந்து திரும்பிவருவேன்! நீ வருந்தாது இவண இருப்பாயாக" என்றனர்.

பொருவில் வெம்பி புலிபுரப் பார்புக
லிருவராணையு மேந்தினே னின்றுபோய்க்
கருவி மாமழைக் கற்புடங் கண்டு நான்
வருவே னீண்டு வருந்தலை நீயென்றான்.

சானகியின் கற்பின் திறத்தை பெண்மணிகள் உற்றுநோக்குக. இதனைக்கேட்ட சீதாதேவி, தனது கணவன் கானகஞ் செல்வதற்கும் வருந்தினாளில்லை; கணவன் வெண்கொற்றக் குடையின்கீழமர்ந்து வேலைசூழ் ஞாலமெல்லாம் தனிச்செங்கோல் செலுத்தியாளும் அரசுரிமையை யிழந்தானென்றும் கலங்கினாளில்லை; "நீ வருந்தாதே; நான் நீங்குவேன்" என்ற சொற்களானது செவியைச் சுட்டுவிட்டதால் மனம் வருந்தி துன்பவேலையில் வீழ்ந்தனள். இராவணசங்காரத்தின் பொருட்டு நாராயணர் திருப்பாற்கடலிலிருந்துவந்து இராமனாகத் திருவவதாரம் புரிந்தபோது, அவரைவிட்டுப் பிரியாதிருத்தல்வேண்டுமென்று பரமசுகத்தை நல்கும் பாற்கடல்வாசத்தை வெறுத்து மண்ணுலகில் வந்து சீதையாக அவதரித்த திருமகள் ஈண்டு "உன்னைவிட்டுப்பிரிவேன்" என்ற சொல்லைக்கேட்டு மனஞ்சகிப்பளோ? கற்பின் கரைகாட்டவந்த காரிகையன்றோ?

நாயகன் வன நண்ணலுற் றனென்று
மேய மண்ணிழந் தானென்றும் விம்மலள்
நீவருந் தலை நீங்குவன் யானென்ற
தீய வெஞ்சொற் செவிசுடத் தேம்புவாள்

சீதை பெருந்துன்புற்று நாயகனது சொல்லை உன்னி உன்னி பெருமூச்செறிந்து "மாரனைப் பழித்த மன்ன! கற்றவர் புகழுங் கற்பகக்கனியே! தந்தையாரும் தாயாரும் சொல்லிய காரியங்களைச்

செய்யத்துணிந்தது சாலவும் நன்றே; யாதுகாரணத்தால் என்னை இங்கே இரு என்று சொன்னீர்? என்னைத் தனியேவிட்டுச் செல்ல தங்கட்கு என்ன தவறு செய்தேன்? தங்களுக்கு என்மீதுள்ள வெறுப்பென்ன? தாய்தந்தையர் தங்களைக் காட்டிற்கு அனுப்பினர் களென்றால் என்னையும் அனுப்பியதாகும. தங்கள் சுகதுக்கத்தில் எனக்கும் பங்குண்டு; நிழலைப்போல தங்களை என்றும்பிரியாதிருக்கு மாறு தந்தையார் கட்டளையிட்டுள்ளார். திருமணகாலத்தில் "உன்னை விட்டு எக்காலத்தும பிரியேன" என்று அக்கினிமுன் சத்தியஞ் செய்தீர்; அதனை மறந்து தாங்கள்மட்டும இப்போது தனியாகக் கானகம் போவது எவ்வாறு பொருந்தும தாங்களின்றி எனக்குச் சுவர்க்கம் கிடைப்பினும் வேண்டேன்; தங்களுடன் கூடியிருப்பது நரகமே எனினும விரும்புவேன், கணவனையிழந்த காரிகை பிணத் திற்கு நிகராவள்; யானும் தங்களுடன்வர அனுமதிக்கவேண்டும்" என்று கூறி கண்ணீர் சொரிந்து நெஞ்சம் நெகிழ்ந்து நின்றனள். ரகுராமர் "பெண்ணே! பெருந்தவப்பிடியே! வருந்தாதே! உன்னை இங்ஙனம் விட்டுச்செல்வது நின்மீது வெறுப்புகொண்டன்று, விருப் பேயாகும். கானகத்தின் கடுந்துன்பம நீ யறிந்தாயில்லை, காயுங் கனியும இலையும் சருகும் உண்ணவேண்டும, அறுசுவையுண்டியை தாதியர் ஊட்ட உண்ட நீ அவைகளை எவ்வாறு உண்பாய்? பஞ்சணை யிற்றுயின்ற நீ பாறையின்மீது எவ்வாறு படுப்பாய்? பனியுங் காற் றும் வெய்யிலும் மழையும மிகுந்தகாட்டில் வாழ்வது நின்னால் முடிந்தகாரியமன்று, பசிதாகத்தைப் பொறுக்கவும சுனை நீரைக் குடிக்கவும் நீ எப்பொழுது கற்றாய்? வெம்புலி சிங்கம் காட்டானை முதலிய மிருகங்களைக் கண்டால் நீ அஞ்சுவாய், செம்பஞ்சு ஒட்டிய மலரினுமெல்லிய நின்பாதம் கல்லிலும் முள்ளிலும் எவ்வாறு நடக்க முடியும்? துன்பமென்பது இன்னதென்றறியாத நீ இக்கடுந்துன் பத்தை எவ்வாறு அனுபவிப்பாய்? பூ மேல்விழுந்தாலும் தழும்பு படும் நின் பொன்னார்மேனி பேய்கள்வாழும பருங்கைக் கற்கள் நிறைந்த கானகத்தின் வெப்பத்தை எவ்வாறு தாங்குவாய்? ஆத லால் நீ இவண் சுகமே இருப்பாயாக" என்றனர்.

இவ்வுரைகளைக் கேட்ட சீதை கானகத்தின் துன்பத்தை ஒரு சிறிதும பொருள்படுத்தினளில்லை என்னே! கற்பின் உறுதி? தாசரதியை நோக்கி "சந்திரவதனா! மரகதவண்ணா! வாழ்ந்தாலும் வாழ்வன்றி நல்குரவிற்றாழ்ந்தாலும் ஒக்க சமைபவளே கற்புடைக்

காரிகையாவள், பதிக்குத் துன்பம் வந்த ஞான்று தானும் பதியுடனிருந்து அத்துன்பத்தில் பங்கெடுத்துக்கொள்ளல்வேண்டும். தங்களுடனிருந்தாலும் காட்டிலே சருகுகளே எனக்கு விண்ணவரமிர்தம்; மிருகங்களின் ஒலிகளே வேயங்குழல் வீணாநாதங்களாம்; கல்லினை மலரினுமினிய மெல்லணையாம்; தாங்கள் முட்களில் நடக்க நேரிடின் யான் அம்முட்களின்மீது முன்னே நடந்து நற்பாதையாக்குவேன், தங்களுக்குப் பசியுண்டாகின்றபோது காய்கனிதேடி நல்குவேன். தாங்கள் நடந்து கால்வருந்தியபோது பாதங்களை வருடி அயர்வு நீக்குவேன்; தங்களைவிட்டு இருக்கின்ற இந்த அயோத்தியா நகரமே எனக்குப் பெருங்காடாகும்; பிரளயகாலத்துச் சூரியனது வெப்பத்தைக் காட்டிலும் தங்கள் பிரிவாலுண்டாகும் வெப்பங் கொடியது; தாங்கள் போகின்ற காடு தங்கள் பிரிவுத்துன்பத்தைக் காட்டிலும் சுடுந்தன்மையதோ? தங்களைவிட்டு ஒருகணமும் பிரிந்திருக்கேன்" என்று விழிநீர் பெருக்கி மனமுருகிக்கூறி நாயகனது அனுமதிபெற்று கணவனுடன் நிழல்போல் தொடர்ந்தனள்.

பரிவிகந்த மனத்தொடு பற்றிலா
தொருவு கின்றனை யூழி யருக்கனு
மெரியு மென்பது யாண்டைய தீண்டுநின்
பிரிவினுஞ் சுடுமோ பெருங் காடென்றாள்.

பெண்மணிகள் சற்று ஊன்றி நோக்குக. கணவனைவிட்டிருக்கும் அரசபோகம் சீதைக்கு அனலாயிருந்தது. கணவனோடிருக்கும் காட்டின் வெப்பம் குளிர்ந்திருந்தது.

பெண்கள் நாயகனுக்குப் புகழையுண்டுபண்ணுவதிலேயே கண்ணுங் கருத்துமாயிருத்தல்வேண்டும். இதனாலன்றோ "சொற்காத்துச் சோர்விலாள் பெண்" என்றார் செந்நாப்போதர். கற்புடை மகளிரின்றேல் ஒருவன் ஒருபோதும் புகழடையமுடியாது. இதனை நன்குவிளக்கும் சீதையின் செயலை பிறிதோரிடத்திற் காண்க.

அசோகவனத்தில் சீதையை அநுமன் கண்டு கணையாழி தந்து நல்லுரை கூறியபின், சீதையைக்கொண்டுபோய் இராமபிரானிடஞ் சேர்க்கவேண்டுமென்றுன்னி, சீதையைப் பணிந்து 'அம்மா! என் மொழியை முனியாது கேள் தங்களை அடியேனது புயத்தின்மீது வைத்து ஒரிமைப்போதில் ரகுநாயகன் இருக்கின்ற இடத்தில் சேர்க்கின்றேன்; இடையில் அரக்கர்கள் எதிர்த்தாலும் அவர்களைக்

கொன்று சினந்தணிவேன். ஒருவராலும் கொல்லப்படமாட்டாத அடியேன் தங்களைக்கொண்டு செல்வேனேயன்றி வெறுங்கையுடன் செல்லேன். மேலும் 'இலங்கையோடு போதது என்னைக்கொண்டு போ" என்று கட்டளையிட்டாலும் இலங்கையைப் பேர்த்து ஒரு கையில் வைத்து, மற்றொரு கையால் அரக்கர்களையெல்லாம் அழிப்பேன். ஆயினும் தங்களை இராமபிரானிடஞ்சேர்த்து அவரை மகிழ்வித்தபின் இங்குவந்து இவரையழித்தல் நன்று. ஆகையால் மறுத்துரைக்காது அடியேனது தோளின்மீது ஏறுவீர்; எம்பிரானிடஞ் சேர்ந்து மகிழ்வீர்; விரைவில் வருவீர்" என்றனன்.

சீதை "மாருதி! அன்பின் மிகுதியால் இவ்வாறு சொற்றனை. நின் ஆற்றலுக்கு ஏற்றதே செப்பத்துணிந்தனை; இது உனக்கு அரியதன்று; ஆயினும் இது என் எண்ணத்திற்கு மாறாக இருக்கின்றது. பேதைமையுடைய என்சிற்றறிவிற்கு இதுபொருந்தவில்லை. நீ என்னை எடுத்துக்கொண்டு செல்கையில் வெவ்விய அரக்கர்கள் தடுத்து யுத்தம் புரியுங்கால், அவர்களுடன் போர்புரியவும் முடியாமல் என்னைக் காப்பாற்றவுமுடியாமல் தடுமாற நேரும். இதுவேயுமன்றி நீ என்னைக் கரவடமாகக் கொண்டுபோனால் இராமபிரானது வில்லுக்குப் பழிப்புண்டாகும். கரவடமாகக் கொண்டுசெல்ல நினைத்தல் தகுதியோ? குழந்தாய்! இராமபிரானன்றி அயலார் என்னைத் தீண்டுதல் அறமாகுமோ? நீயும் ஓர் ஆடவனேயாகும். மேலும் நீ இந்த இலங்கையையும் அரக்கரையும் அழிக்கிறேனென்றனை; நான் அழிக்கவேண்டுமென்று நினைத்தால் இன்னல் செய்யும் இராக்கதர்க் குறைவிடமாகிய இந்த இலங்கையைமட்டுமோ? கணக்கில்லாத உலகங்களையெல்லாம் என் சொல்லினால் (சாபத்தினால்) சுடுவேன்; அவ்வாறு செய்தால், தூய்மையுடைய இராமபிரானது வில்லுக்குப் புகழில்லாமற் போய் விடுமென்று எண்ணியிருக்கிறேன். இல்லையேல் இந்த இலங்கை எனக்கு எம்மாத்திரம்? கணவனுக்குப் புகழை விளைவிப்பதே காரிகையார் கடமை. பார்வையினாலேயே இலங்கையை எரிக்கும் ஆற்றல் எனக்கிருந்தும் தசரத குமாரராம ரகுவீரருக்குக் கீர்த்தியை விளைவிக்கவேண்டுமென்று கருதி சாந்தத்தை வகித்துளேன்.

அல்லன் மாக்க ளிலங்கைய தாகுமோ
எல்லைநீத்த வுலகங்கள் யாவுமென்
சொல்லி னாற்சுடு வேனது தூயவன்
வில்லி னாற்றற்த மாசென்று வீசினேன்.

அநுமனே! ஆதலால் நீ சென்று இரகுநாயகருக்கு நிகழ்ந்தவை கூறி, சிறைமீட்குமாறு செய்வாயாக" என்றனள்.

சகோதரிகளே! ஜானகியின் அமுதவாக்குகளையும் தூய எண்ணத்தையும் கருத்தூன்றி காண்க.

இதுவேயுமன்றி இலங்காபுரி முழுவதும் சுட்டது அநுமனன்று, அநுமனை வைத்த அக்கினியுமன்று, சீதாதேவியின் கற்புத்தீயேயாம். இதனை விபீஷணர் இராவணனிடம் கூறுமாறு காண்க.

போநகர் முழுவது நினது கொற்றமும்
சானகி யெனும்பெய ருலகின் நம்மனை
யானவள் கற்பினால் வெந்த தல்லதோர்
வானரஞ் சுட்டதென் றுணர்தல் மாட்சியோ,

அன்புடையீர்! கற்பின் மாண்பினை யாரே கூறவல்லார்? இத்தகைய கற்பின் பெருந்தகைப் பெண்டிர் வாழ்ந்த நாடு நம் நாடு. ஆதலால் பெண்மக்கள் கற்பிலக்கணத்தை நன்குணர்ந்து அவ்வண்ணம் ஒழுகி பிறந்த வீட்டார்க்கும் புகுந்தவீட்டார்க்கும் பொன்றாப் புகழையுண்டாக்கி என்று மழியா இன்பத்தை எய்துவார்களாக.

(தொடரும்.)

வினா விடை மணிகள்.

(ஆதிசங்கரர்)

கிம்கஹநம் ஸ்த்ரீசரிதம் கஸ்சதுரோ யோந கண்டிதஸ்தேந ।
கிம் து:கம ஸந்தோஷ: கிம்லாகவ மதமதோ யாச்ஞா ॥

கே .— அளவிடமுடியாதது எது?

ப :— பெண்களின் நடை.

கே — சமர்த்தன் யாவன்?

ப .— பெண்களின் நடையினால் வஞ்சிக்கப்படாதவன்,

கே .— வறுமை யாது?

ப :— திருப்தியின்மை.

கே .— கீழ்மை யாது?

ப :—கீழ்ப்பட்டவனிடத்தில் யாசிப்பது,

உ

ஸ்ரீ குருப்யோ நம:

கிருகஸ்தம்

(மனையறம்)

(27-வது பக்கத் தொடர்ச்சி.)

மந்திரம், தன்னை அயலார் அவமதித்தல், மாதரைக் கலத்தல், தன்வஞ்சனை, தன் ஆயுள், தான் பிறந்தநாள், தன் வீட்டிற் பொருந்திய குற்றங்கள், தனக்குரிய செல்வம், தன்மனைவியின் குணங்கள் ஆகிய ஒன்பதும், உயிர் நீங்குங்காலமட்டும் அயலாரிடம் சொல்லப்படாது.

தகுந்த விஷயங்கள், தான் பெற்றிருக்குங் கடன், கடனை யொழிக்கும்வகை, பொருள்தேடும் வழி, பொருளைச் செலவிடுதல், பெண்ணைமணஞ் செய்து கொடுத்தல், தன்னுடைய நடை, தன் வமிசத்திற் செய்தபாவம், பிறருடைய நல்லகுணங்கள் ஆகிய ஒன்பதையும் ஒளியாமற் சொல்லுதல் வேண்டும்.

உண்மைபேசுதல், சாந்தம், கொலைபுரியாதிருத்தல், அந்தக்கரணங்களை யடக்குதல், ஆசாரம், அளவில்லாமற் கொடுத்தல், கோபத்தை விலக்குதல், திருடாதிருத்தல், அன்னியர் படுந்துன்பத்தைக்கண்டு மனமிரங்குதல் ஆகிய ஒன்பதும் தேவர்கள் எதிர்கொண்டுவந்து தம்மை யழைப்பதற்கு ஆகாயத்திற்கனுப்பிய தூதராகும்.

முகத்திற்கெதிரே ஒன்றுபேசி பிரிந்தால் வேறொன்று பேசுவோர், தூதர், நூற்கேள்வியில்லாத வைத்தியர், பிறர் பொருளை அபகரிப்போர், காமுகர், கொடுந்தொழில் புரிவோர், மல்யுத்தம் புரிவோர், செருக்குடையவர், இழிதொழில் செய்வோர் ஆகிய ஒன்பது பேருக்கும் பொருள்கொடுத்தல் தீதாகும்.

பெரியோர்கள், சினேகிதர், தம் வழிமுறையில் நிற்கின்றவர்கள், தரித்திரர், பிறவுயிர்களைத் தன்னுயிர்போற் காப்பவர்கள், துறவிகள், பிதாமாதாக்கள், குரு, தமக்கு உதவி செய்தவர்கள் ஆகிய ஒன்பது பேருக்கும் பொருள் கொடுத்தால் ஒன்று கோடியாகும்.

தன்மனையாளையும், அடைக்கலப் பொருள்களையும், சரணமடைந்தோனையும், தன் குலாசாரத்தையும், சேமநிதியையும், புத்திரனையும்,

புத்திரனுக்காகத் தான்தேடிய பொருள்களையும் மரணத்திற்குச் சமமான துன்பம் வந்தாலும் கைவிடலாகாது.

தமையன் விவாகமில்லாதிருக்கத் தம்பி விவாகஞ் செய்து கொள்ளலாகாது. ஆனால், மூத்தவன் ஊமையாகவேனும் செவிடனாகவேனுமிருந்தாலும், சந்நியாசம் பெற்றுக்கொண்டாலும், தூர தேசஞ்சென்று இருக்குமிடம் அறியப்படாதிருந்தாலும் தம்பி விவாகஞ்செய்து கொள்ளலாம்.

அன்னம்படைக்கும் கருவியாலன்றி அன்னத்தைக் கையாற் பரிமாறுதலும், அன்னத்தைக் கையிலேற்றுப் புசித்தலுந் தீதாகும். இரும்பாலாகிய கருவியால் அன்னமிட்டவர்கள் நரகமடைவார்கள். அவற்றைப் புசித்தவர்களும் அமேத்தியத்தை யுண்டவர்களுக்கு ஒப்பாவார்கள். பல்லை விரலால் தேய்த்தாலும், வெள்ளுப்பைச் சேர்த்து உண்டாலும், கையாலெடுத்து இட்டலவணம், நெய், தண்ணீர், பாற்சோறு இவைகளை உண்டாலும் கோமாமிசத்தை யுண்டதற்கு நிகராகும். போசனஞ்செய்தபின் வாயில்வார்த்த நீரை கொப்பளித்து உமிழாமற் குடித்தால், தன்னையும் பிதிர்களையும் தேவர்களையும் கொன்ற பாவிகளுக்குச் சமமாவார்.

நீராடாமலும், செபஞ் செய்யாமலும், பூசை செய்யாமலும், பாலர் விருத்தர் முதலியவர்க்கு உணவுதாராமுன்னும், அதிதிகளுக்குத் தாராமுன்னும் கிருகஸ்தன் உண்ணப்படாது. அங்ஙனமுண்போன் அருநரகடைவன்.

பலபேர் கூடியளித்த அன்னத்தையேனும், சீமந்தமுகூர்த்தத்திலேனும் பொருள் பெற்றுக்கொண்டு கல்விகற்பிக்கின்றவர் வீட்டிலேனும் போசனஞ்செய்தால் சாந்திராயணவிரதம் அனுஷ்டித்தல் வேண்டும். பசுவின் தொழுவத்திலும், யாகசாலையிலும், வேதியரிடத்திலும், ஆலயத்திலும் இருக்கும்பொழுது காலை நீட்டப்படாது. உண்கலத்தைக் கையிலேனும் மடியிலேனும் வைத்துக் கொண்டு உண்ணலாகாது. கட்டிலிலும் பீடத்திலுமிருந்து உண்ணுதலும் மட்கலத்திற் புசித்தலுமாகாது.

பொய்பேசுதல் குற்றமாயினும் மங்கையர் பிணக்கிலும், மறையவர் உயிர்பிழைக்குமென்னுஞ் சமையத்திலும், பசுவை இரட்சித்தற்பொருட்டும், விவாகஞ்செய்தற்பொருட்டும் பேசும்பொய்யானது மெய்யைக் காட்டிலும் சிறந்ததாகும்.

நீர் பெருக்கத்தில் நீந்துகிறவனும், அக்கினிபற்றி எரிகின்ற சமயத்தில் அருகிற செல்லுகிறவனும், உயர்ந்த மரத்திலும் கல்லின் மீதும் ஏறுகின்றவனும், மகளையும் மனைவியையும் விலைக்குக்கொடுப்பவனும் ஆகிய ஆறுபேரும் தமக்குத் தாமே இயமனாவார்கள். பசுவின் தொழுவத்தில் நித்திரை செய்தலும், இரகசியத்தை வெளியிற் கூறுதலுமாகாது. தன்னுடைய ஒழுக்கத்தினின்றுந் தவறினவன், தன்னைத்தானே கொன்றவனாவான். தான் சொன்ன சபதத்தை நிறைவேற்றாதவன் மோட்சத்தையடையமாட்டான். புதிதாக வீட்டுக்கு வந்த மருமகளையும், சிறு பெண்களையும், வீட்டிலுள்ள பிணியாளர்களையும், கருப்பவதிகளையும், சிறு குழந்தைகளையும், மூப்புடைய பிதா மாதா முதலியவர்களையும் முன்னே புசிப்பித்தல்வேண்டும். தன் பிதா மாதாக்கள் இறந்த மாதமும் திதியும் வரும்போது ஆண்டுதோறும் அன்புடனும் விருப்பமுடனும் சிராத்தம் செய்தல்வேண்டும். அமாவாசை கிரகணகாலம், உத்திராயணம், தக்ஷிணாயனம், மாதப் பிறப்பு முதலிய புண்ணியதினங்களில் புண்ணியதீர்த்தத்தில் நீராடிப் பிதிர் தர்ப்பணஞ்செய்து அதிதிகளோடும் சுற்றத்தாரோடும் உணவு செய்து, விரதநியமத்துடன் இருத்தல்வேண்டும். இல்வாழ்வானே மற்றைய ஆச்சிரமத்தார்கள் அனைவருக்கும் ஆதாரமானவன். ஆதலால் தரும நிலையும் உலகநிலையும் இல்லறத்தினாலேயே உண்டாகுகின்றன. பிரமசரியம் கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்யாசம் என்கிற நான்கு ஆச்சிரமங்களும், பரகதியையடைவதற்கு நான்குபடியுடன் சேர்ந்த ஓர் ஏணிக்குச் சமானமாயினும் கிருகஸ்தம் மிகவும் சிறந்த நிலையாக ஆன்றோர்களால் கருதப்படுகிறது.

இல்லறம் மேற்கொண்டோன் ஒரு சமயம் தன்னொழுக்கத்திற் றவறுவானேயாயின் கழுவாயுண்டு. ஏனைய ஆச்சிரமத்தை மேற்கொண்டோர் தவறுவரேல் கழுவாயில்லை. முத்தொழிலுடைய மூவரும், இந்திரன் முதலிய இமையவரும், அகத்தியாதி அருந்தவரும் இல்லறத்தையே நடத்திக் காட்டுகின்றனர். இல்வாழ்வோனுக்கு இம்மை நலனும் மறுமை நலனும் எளிதிலுண்டாகும். இல்லறத்தானது பெருமையை இத்துணையதென்று எவரே யறையவல்லார்?

எவன் மனத்தில் வருத்தமின்றி இந்தக் கிருகஸ்த தருமத்தை நடத்திவருகிறானோ அவன் தனது பிதரு பிதாமகர்களான முன்னோர் பதின்மரையும், தன் பின்னுள்ளவர்களான பதின்மரையும் பரிசுத்தர்களாகச் செய்கிறான். முன்பத்தும் பின்பத்தும் தன்னோடும் ஆக

இருபத்தொரு தலைமுறைகளையும் கிருகஸ்தன் முத்தியிற் சேர்க்கிறான். அவன் சக்கிரவர்த்திகளுடைய உலகங்களுக்கு ஒப்பான கதியை அடைவான். அல்லது இந்திரியஜயமுள்ளவர்களுக்குள்ள கதி விதிக்கப்பட்டிருக்கிறது. விமானத்துடன் கூடியதும் வேதத்தில் காணப்பட்டதுமான சுவர்க்கம் மிகவும் அழகானது. அடக்கமுள்ள மனமுடைய கிருகஸ்தர்களுக்கு சுவர்க்கலோகத்தில் நிலையான வாசம் ஏற்படுகிறது. பிரமாவினால் இது படியாக ஏற்படுத்தப்பட்டது. முறையாக இந்த இரண்டாவது ஆசிரமத்தை அடைந்து அனுஷ்டிப்பதனால் சுவர்க்கத்தில் பூசிக்கப்படுகிறான். இத்தகைய கிருகஸ்த தருமத்தை அனுஷ்டித்தவன் விண்ணாடு புகுங்கால் வானவர்கள் எதிர்கொண்டு அழைத்துச்சென்று தங்களுக்குள் ஒருவனாக உயர்ந்த இடத்தில் இருக்கவைத்து உபசரிப்பர்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும்

—திருக்குறள்.

கிருகஸ்தம் என்னும் இல்லறத்தை மேற்கொண்டோர் ஒவ்வொருவரும் மேற்போந்த தருமங்களை ஊன்றிக் கவனித்து அதன்படி ஒழுகி எல்லா நலன்களையும் எய்தி இன்புற்று இனிது வாழ்வாராக.

(தொடரும்).

யக்ஷப்பிரஸ்னை.

வினா :— யஜ்ஞத்திற்குரிய முக்கியமான ஸாமம் எது ?
விடை :— உயிரே யஜ்ஞத்திற்குரிய முக்கியமான ஸாமம்.

வினா :— யஜ்ஞத்திற்குரிய முக்கியமான யஜுஸ் எது ?
விடை :— மனமானது யஜ்ஞத்திற்குரிய முக்கியமான யஜுஸ்.

வினா :— இவர்களுடைய யஜ்ஞத்தை எது வரிக்கிறது ?
விடை :— ரிக்கொன்றே யஜ்ஞத்தை வரிக்கிறது.

வினா :— யஜ்ஞமானது எதை மீறாமல் இருக்கிறது ?
விடை :— யஜ்ஞம் அந்தரிக்கை (வேதவாக்கை) மீறாமலிருக்கிறது.

உ

ஓம் குஹாய நம.

குரு சிஷ்ய லக்ஷணம்

சச்சிதானந்தன்.

(96-ம் பக்கத் தொடர்ச்சி)

சிஷ்ய லக்ஷணம்.

குருநாதனைக் கிடைப்பானேயாகில் அப்போது கைலையங்கிரியில் சனகாதிகளுக்கு உபதேசித்த பரமசிவனைப்போல் பாவித்து சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து இருகண்களினும் கண்ணீர்வார மயிர்க்கூச் செறிவு முதலியன உண்டாகவேண்டும்.

சிவஞானசித்தியில்

திருமறையோர் முனிவருக்கன் றாலநீழற்
றிருந்தவரு முருவந்தபெருந் தகைதானிந்த
விருநிலமே லருளுருவாய் வந்துதோன்றி
யிருந்திடுங்கேம் புவிபுழுவை யுமிபோல் வேய்ந்த
திரிமலமே நீங்கிவா லுணர்வால் ஞானச்
மெய்மையிற லுறுதிருநாள் சேவித்திட்டுந்
குருபாலே மருளுலக வாதைநீத்தும்
குணமடைந்த மனத்திலுறை வணக்கஞ்செய்வாம் எனவும்,

அதிரகசியத்தில்,

கண்டான் குருவைக் கண்ணூறாக் கதறி வீழ்ந்தான் கமலமிசை
யண்டார் வானே தேடுமோலே யயனே யென்றனகமகிழ்ந்தான் [யே
றேண்டா லியலும் பணிசெய்யத் துணிந்தான் பணிந்தான் மும்முறை
பண்டா லிறைந்த பாவாலுங் காயா யென்னப் பாடினான்.

சிவஞானப்ரகாச வெண்பா

ஆசானைக் கண்டோரு மன்புருக கைகுவிய
மாசாருடம்பு மயிர்க்கூச் செரியும்—பேசாத
வானந்த முன்றுறு மக்கணமே பாசாங்க
டானந்த முந்தி தரும்.

ஆகவே, விதிப்படி சரணடைந்து தன் (1) சரீரம் (2) மனது (3) தனம் (4) வாக்கு என்பவற்றைக் குருநாதனுக்கு அர்ப்பணம் செய்யவேண்டும். (தொடரும்)

---

1. அவர் கட்டளை மீறாமல் நடப்பதுதான் சரீர அர்ப்பணம்.
2. தோஷதிருஷ்டி வரவொட்டாமல் குருநாதன் வடிவத்தையே தியானிப்பது மனதின் அர்ப்பணமாம்.
3. தனத்தையெல்லாம் விட்டு சரணமடைவது தன அர்ப்பணம்.
4. குருநாதன் குணங்களைப் புகழ்ந்து சொல்லுதலோடு தோஷத்தை சொல்லாதிருத்தலே வாக்கின் அர்ப்பணம்.